(இ) திருப்பூர் நகரத்தில் உள்ள 6 மாதம்—3 ஆண்டு வயதுத் தொகுதியைச் சேர்ந்த 1,313 ஏழைச் சிறுர்கள் இத் திட்டத்தினுல் பயனடைகிறுர்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் ஓர் ஆண்டில் 250 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு 75 கிராம் எடையுள்ள 'சிறப்பு' பால் ரொட்டி வழங்கப்படுகின்றது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்னும் ஏராளமான குழந்தைகள் இந்தச் சத்துணவுத் திட்டத்தில் வராமல் இருக்கிறுர்கள். அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கம் உண்டா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு அவர்கள் ஒதுக்கியிருக்கிற ரூபாயும், எந்த அளவுக்கு எத்தனை பேருக்கு அளிக்க வேண்டுமென்ற குறிப்பில் உள்ளபடி (பழங்குடி) ஷெடியூல்ட் டிரைப்ஸ் சினருக்கு 3,000 குழந்தைகளுக்கும், நகர்ப்புற சேரிக் குழந்தைகளுக்காக 1,56,000-க்கும் கொடுக்கப்படுகிறது. ஆக மொத்தம் 1,59,000 குழந்தைகளுக்கு தரப்பட வேண்டுமென்று இருக்கிறது. அதை இப்போது 1,53,350 குழந்தைகளுக்குத் தந்து கொண்டு இருக்கிறோம். அதுவும், அந்தப் பழங்குடி குழந்தைகள் 1,300 பேருக்குத் தருகிறோம். அதையும் கூட சேர்த்து 1 லட்சம் மக்கள் மேற்பட்டு வாழ்கிற பகுதியில் இருக்கிற குழந்தைகளுக்கு நீடித்துக் கொடுப்பதற்கும் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இன்னும் கர்பிணியாக இருப்பவர்களுக்கும், ஆறு வயது வரையில் இருப்பவர்களுக்கும் தரப்பட வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருப்பூர் நகரத்தில் இப்போது ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் என்னென்ன உணவு வகைகள் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் அப்போதே விவரம் சொன்னேன். 75 கிராம் எடையுள்ள 3 ஸ்லைஸ் சிறப்புப் பால் ரொட்டிகள் ஒவ்வொரு குழந்தைக்கும் ஓர் ஆண்டில் 250 நாட்களுக்குத் தரப்படுகிறது. அந்த வகையில் 1,313 திருப்பூரில் இருக்கும் குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அரிசனங்களுக்கு விசை ஏற்றங்கள் விநியோகம்

*483. வினு—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அரிசனக் குடியிருப்புக்களுக்காக தனியாக ஒதுக்கப்பட்ட மானியத்திலிருந்து 1970-71-ம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை பேருக்கு பம்பு செட்டுகள் வழங்கப்பட்டுள்ளன?

1972 மார்ச் 14]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: யாருக்கும் பம்புசெட்டுகள் வழங்கப்படவில்லை.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, ஹரிஜன் காலனியில் உள்ள ஹரிஜனங்களுக்கு பம்புசெட்டுகள் கொடுக்காவிட்டாலும், எத்தனைக் காலனிகளில் உள்ள தெருக்களுக்கு விளக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கேட்கப்பட்டிருக்கிற கேள்வி பம்பு செட்டுகளைப்பற்றித்தான். தெருவிளக்கு பற்றித் தனியாக கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்கப்படும்.

கோவை மாவட்டத்தில் ஏழைகளுக்கு நிலம்

*484. வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் 1970—71-ம் ஆண்டில் நிலமில்லாத ஏழைகட்கு வழங்கப்பட்ட மொத்த நிலம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 15,927.86 ஏக்கர்.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, அந்த நிலத்திற்கான மதிப்பு எவ்வளவு? மேற்கொண்டும் அங்கே இன்னும் அதிகமான நிலத்தைக் கேட்க அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிலத்திற்கான மதிப்பு எவ்வளவு என்பது பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை. மேற்கொண்டும் அரசாங்கத்திற்கு புறம்போக்கு நிலம் தேவையில்லை என்று சொன்னால், அதையும் பட்டா செய்து கொடுக்க ஆட்சேபணை இல்லை. அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, இந்த 15,000 ஏக்கர் நிலத்தில் ஏற்கெனவே விவசாயம் செய்தவர்கள் எவ்வளவு பேர், புதிதாக நிலம் அளிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக் கேள்வி வேண்டும். அந்த விவரம் இல்லை.

திரு. நா. வெ. குருசாமி: அந்த நிலத்தில், ஒவ்வொரு ஆளுக்கும் எவ்வளவு நிலம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.